2018 ஜூன் 1] [*திரு. எடப்பாடி கே. பழனிசாமி*]

2. தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்புகளான TNSWAN, TNSDC *மற்றும் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் மின் ஆளுமை சேவைகளை இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகளிலிருந்து கண்காணித்து, தடங்கலற்ற மற்றும் பாதுகாப்பான இணைய சேவையினை வழங்கும் பொருட்டு "தமிழ்நாட்டிற்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்புத் திட்டம்" 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எல்காட் நிறுவனம்மூலம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் தடையற்ற இணையவழி சேவைகள் மற்றும் அரசுத் துறைகளின் தரவுகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.*

3. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அதன் சந்தாதாரர்களுக்கு தற்போது தரமான வரையறையில் (SD-Standard Definition) *டிஜிட்டல் கேபிள் டி.வி. சேவையை வழங்கி வருகிறது. அதனை மேம்படுத்தும் விதமாக, உயர் வரையறை* (HD-High Definition) *தரத்தில் மிக துல்லியமான சேவை* "HD *செட் டாப் பாக்ஸ்" வாயிலாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

(உ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்–1 தேர்வுகளுக்கான வயது உச்ச வரம்பினை அதிகப்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை குறித்த அறிவிப்பினை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற குரூப்-1 பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளில் பங்குபெறுவதற்கான வயது உச்சவரம்பினை உயர்த்திடுமாறு பல்வேறு தரப்பினரிடம் இருந்து அரசுக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. அதன் அடிப்படையில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய தேர்வுகளுக்கு உள்ள வயது உச்சவரம்பினைப்போல, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்-1, 1-A, 1-B *பணியிடங்களுக்கு தற்போதுள்ள* SC/ST/MBC/BC & DNC

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 1

பிரிவினர்களுக்கான வயது உச்சவரம்பு 35-லிருந்து 37 ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) இதர பிரிவினருக்கு தற்போதுள்ள வயது உச்சவரம்பு 30-லிருந்து 32 ஆகவும் உயர்த்தப்படுகிறது என்பதை இப்பேரவைக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வனத் துறை, பள்ளிக் கல்வி, உயர் கல்வி, தகவல் தொழில்நுட்பவியல் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைகள் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களிடம் பயிற்சி எடுத்ததால், மாண்புமிகு அம்மா அவர்களைப்போன்று, அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்கள், நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக அனைத்துத் துறைகளைப் போல, வனத் துறை வளர்ச்சிக்கும் ஆலோசனை கூறி, சட்டமன்றத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை முன்வைக்கும்போது குறிப்பெடுத்து, நேற்று 31-5-2018 அன்று அவர்கள் எழுந்து வனத் துறைகளினுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்ற நல்ல செய்தியை அறிவித்த மனிதநேயர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் திரு. எடப்பாடியார் அவர்கள், இன்று விதி 110-ன்கீழ் அறிவிப்புகளை அறிவித்து, வனத் துறையைத் திக்குமுக்காடச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டில் உள்ள வனப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து பற்றியும், அந்தத் தீ விபத்து எப்படி ஏற்படுகிறது என்பதைப் பற்றியும் சொல்லி, அதைக் கட்டுப்படுத்துகின்ற நிகழ்வில் ஏற்படுகின்ற துரதிருஷ்டவசமான பிரச்சினைகள், காயம்பட்டவர்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் மாபெரும் மனதோடு, தீ விபத்து ஏற்படாமல் வனத் துறையைக் காக்க உரிய நடவடிக்கை எடுப்பதற்கு 2 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருப்பதற்கு மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)